மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண் 566.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இங்கே ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதில் யார் கேட்ட கேள்வி என்ற விவரமே இல்லை. ஆனால் இன்னொரு விவர அறிக்கையில், 'திரு. என். கிட்டப்பா, எம்.எல்.ஏ. விடுத்த சட்டமன்றப் பேரவையின் உடுக்குறியிட்ட வினா எண் 1992-க்கு அளித்த விடையைக் காண்க' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்போல இரண்டு, மூன்று தடவைகள் கொடுத்திருக்கிறார்கள். இது நடைமுறைக்கு ஒத்ததாக இல்லை. எனவே, ஒரே முறையானபடி இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் பேரவைத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண் 5008 (ஆ)விற்கான விவரங்கள் என்று போடப்பட்டிருக்கிறது.

" Details for (B) for the starred question No. 5008 " சில சமயங்களில் பெயர் போடப்பட்டிருக்கும், சில சமயங்களில் எண் போடப்பட்டிருக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இன்னொரு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு உறுப்பினர் பெயர் விவரமும் இருக்கிறது. எனது பெயர் அச்சிடப்படவில்லையே. அதைத்தான் சுட்டிக் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டிப்பார்ட்மெண்ட் கொடுத்த விடை. அப்படியே அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி அப்படிப்பட்ட நிலை வராமல் பார்த்துக் கொள்ளப்படும்.

திரிபுரா மாநில அதிகாரிகள் வருகை

*** 566 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 நவம்பர் மாதம் திரிபுரா மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் நமது மாநிலத்தில் நடைபெறும் பஞ்சாயத்து ஆட்சி முறையைக் கண்டறிய வந்தனரா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1974 மார்ச் 22]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(ஆ) விவரங்கள், @அவைமுன் தனியே வைக்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த திரிபுரா மாநில அதிகாரிகள் நம்முடைய ஊராட்சி முறை பற்றி என்ன கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்? எழுத்து மூலமாகத் தெரிவித்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்தக் குழுவினர் சென்னையிலிருந்து புறப்பட்டு செங்கல்பட்டு, இராமநாதபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து பல்வேறு பகுதிகளைப் பார்வையிட்டுப் பல்வேறு வேலைகள், நடைபெறுகிற திட்டங்களை எல்லாம் பார்வையிட்டு அவற்றுக்காக எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டியுள்ளார்கள். பாராட்டியதோடு மட்டுமல்லாமல் இப்படிப்பட்ட இந்த நல்ல ஏற்பாடுகளுக்கு திரிபுரா அரசு அகர்தாலாவிலுள்ள ஊராட்சி இயக்குநர் தமிழக அரசுக்கு 5—12—1973-ம் நாளிட்ட தந்தி மூலம் நன்றி தெரிவித்துள்ளார்கள்.

வீட்டு வசதி வாரிய அலுவலர்கள்

* 567 வினு.—**திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மின்சார வாரிய அலுவலர்களுக்கு போனஸ் தொகை தரப்படுவதைப் போல வீட்டு வசதி வாரிய அலுவலர்களுக்கும் போனஸ் தொகை வழங்க அரசினரிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

Employees in Ribbon factories

* 568 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the total number of men and women employed in the Art Silk Ribbon Factories in Coimbatore district as on date ; and

(*b*) their wage structure?

@ 760-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.